1986 மே 14]

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவைக்கு ஓர் அறிவிப்பு : 1986-ஆம் ஆண்டு தமிழ்நாடு கூடுதல் விற்பனை வரி (திருத்த) சட்டமுன்வடிவை அறிமுகம் செய்ய ஆளுநர் தமது இசைவைத் தெரிவித்துள்ளார் .

4. அரசினர் சட்ட முன்வடிவுகள்—தொடர்ச்சி.

(எ) கூடுதல் விற்பனை வரி (திருத்த) சட்ட முன்வடிவு, 1986.

மாண்புமிகு தா. வீராசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழி கிறேன்.

''1986-ஆம் ஆண்டு தமிழ்நாடு கூடுதல் விற்பனை வரி (திருத்த) சட்டமுன்வடிவை பேரவை முன் அறிமுகம் செய்ய அனுமதி அளிக்கவேண்டும்''.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறை வேற்றப்பெற்று, அனுமதி வழங்கப்பெற்றது.

மாண்புமிகு தா. வீராசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இச்சட்டமுன்வடிவை பேரவை முன் அறிமுகம் செய்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இச்சட்டமுன்வடிவு அறிமுகம் செய்யப்பெற்றிருக்கிறது.

3. அறிவிப்புகள்—தொடர்ச்சி.

(ஏ) உணவகங்கள் மற்றும் தங்கும் விடுதிகளில் ஆடம்பரப் பொருள் கள் மீதான வரி (திருத்த) சட்ட முன்வடிவு, 1986 (ஆ.இ.)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவைக்கு ஓர் அறிவிப்பு: 1986-ஆம் ஆண்டு தமிழ்நாடு உணவகங்கள் மற்றும் தங்கும் விடுதிகளின் ஆடம்பரப் பொருள்கள் மீதான வரி (திருத்த) சட்டமுன்வடிவை அறிமுகம் செய்ய ஆளுநர் தமது இசைவைத் தெரிவித்துள்ளார்.

4. அரசினர் சட்ட முன்வடிவுகள்—தொடர்ச்சி.

(ஏ) உணவகங்கள் மற்றும் தங்கும் விடுதிகளின் ஆடம்பரப் பொருள் கள் மீதான வரி (திருத்த) சட்ட முன்வடிவு, 1986, (ஆ.இ.)

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
சட்டமன்றப் பேரவை
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

மாண்புமிகு தா. வீராசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்.

"1986-ஆம் ஆண்டு தமிழ்நாடு உணவகங்கள் மற்றும் தங்கும் விடுதிகளின் ஆடம்பரப் பொருள்கள் மீதான வரி (திருத்த) சட்டமுன்வடிவை பேரவை முன் அறிமுகம் செய்ய அனுமதி அளிக்கவேண்டும்".

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப் பெற்று, அனுமதி வழங்கப்பெற்றது.

மாண்புமிகு தா. வீராசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இச்சட்டமுன்வடிவை பேரவை முன் அறிமுகம் செய்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இச்சட்டமுன்வடிவு அறிமுகம் செய்யப்பெற்றிருக்கிறது.

5. அரசினர் தனித் தீர்மானம்.

தமிழ் நாடு சட்டமன்ற மேலவையை நீக்குதல்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதல்வர் அவர்களின் பெயரால் உள்ள கீழ்க் கண்ட தனித் தீர்மானத்தை நான் மொழிகிறேன்—

"அரசியலமைப்புச் சட்டத்தின் 169-வது உறுப்பின் (1)-வது கூறின்படி, தமிழ்நாடு சட்டமன்ற மேலவை நீக்கப்பட வேண்டும் (abolished) என தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை தீர்மானிக்கிறது."

1918-வது ஆண்டில் மாண்டேகு செம்ஸ்போர்டு அரசியல் சீர்திருத்தக் குழுவினுடைய அறிக்கையின் பேரில் மேலவைத் தத்துவம் முதல், முதல் இந்தியாவில் உருப்பெற்று எழுந்தது. அந்தத் தத்துவத்தை 1935-வது ஆண்டு இந்திய அரசாங்கச் சட்டமும் ஏற்றுக்கொண்டது. இந்தியா விடுதலை பெற்றதற்குப் பிறகு தனி அரசியல் அமைப்புச் சட்டம் ஒன்று அமைக்கப்பட வேண்டும் என்ற தன்மையில், அரசியல் அமைப்புக் குழு ஒன்று அமைக்கப்பட்டு, பாபு ராஜேந்திர பிரசாத் அவர்களின் சீரிய தலைமையின் கீழ் அமைக்கப்பட்டு ஒரு தனி அரசியல் அமைப்புச் சட்டம் உருவாக்குவதற்கான ஏற்பாடுகள் நடைபெற்றன.

அப்போது மாநிலங்களில் மேலவை வேண்டுமா, வேண்டாமா என்பது பற்றிய கருத்துக்கள், அரசியல் அமைப்புச் சட்டத்தை உருவாக்குகின்றபோதே பல உறுப்பினர்கள், பல கருத்துக்களை எடுத்துத் தெரிவித்திருக்கிறார்கள். வேண்டாம்